## மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

********

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள் தலைமையில், இன்று **(26.11.2014)** தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சட்டமன்றப் பேரவையில் 2014–15 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக்குறிப்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீதான முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், மார்ச் 2015க்குள் கூட்டுறவுத்துறையின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட பல்வேறு வகையான கடன்கள் உள்ளிட்ட அனைத்து வகையான குறியீடுகளையும் எய்திடவும், பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சிறப்பு பொதுவினியோகத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பொருட்கள் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி எந்தவித புகாருக்கும் இடம் அளிக்காமல் வழங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தினார்கள்.

டெல்டா மாவட்டங்களில் வேளாண் பருவகாலம் தொடங்கிவிட்ட நிலையில், விவசாயிகளுக்கு தேவையான கடன் உதவிகளை உடனுக்குடன் எளிதாக வழங்கவும், உரம், விதை மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்களை வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், இதர கடன் உதவிகளை தாமதமின்றி வழங்கவும், முன்னுரிமை அளித்து செயல்படுமாறு அறிவுறுத்தினார்கள். 2014–15 ஆம் ஆண்டில் ரூ. 5000 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 6,60,682 பயனாளிகளுக்கு ரூ. 3,377.78 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் கடந்த ஆண்டு நவம்பர் வரை 1,63,254 மெ.டன் அளவிற்கு யூரியா விநியோகம் செய்யப்பட்டது. அதுவே, நடப்பாண்டில் இதுவரை 1,95,047 மெ.டன் யூரியா விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் மாதங்களுக்கு தேவையான உரங்கள் கொள்முதல் செய்ய தக்க முன் ஏற்பாடுகளையும் ஆய்வு செய்து, அதில் எவ்வித குறைபாடுகளுக்கும் இடம் தராமல் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

. . . . 2

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 57 பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நுகர்வோர் நியாயமான விலையில் காய்கறிகளை வாங்கவும், விவசாயிகளுக்கும் விளைபொருட்களை விற்க உத்தரவாதமான சந்தையும் கிடைக்கிறது. இத்திட்டத்தை மாவட்டந்தோறும் விரிவுபடுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆலோசனை தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்திடும் வகையில் ஏற்கனவே நடத்தப்பட்டு வரும் 210 கூட்டுறவு மருந்தகங்களுடன் நடப்பாண்டில் புதிதாக 100 அம்மா மருந்தகங்கள் தொடங்க திட்டமிடப்பட்டு தற்போது 36 அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அம்மா மருந்தகங்களின் முழு பயன்களும் பொதுமக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யவேண்டும்.

ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படையும் வகையில் அவர்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் உடனடியாக தங்கு தடையின்றி சென்று சேரும் வகையில் சீரிய முறையில் செயல்படுத்தி அனைவரும் பயன்பெற முழு ஈடுபாட்டுடன் செயல்படுமாறு கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.பி.சிவன்அருள், திரு.இராம. ஜெயம்பாண்டியன், திருமதி கா.பிரமிளா, திரு.க.மா.வெள்ளியங்கிரி, திரு.கே.ஜெகன்நாதன், டாக்டர் என்.வில்வசேகரன், திரு. பா.பாலமுருகன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.ம.அந்தோனிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

<u>புகைப்பட செய்தி</u>

**மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு.செல்லூர் கே.ராஜு** அவர்கள் தலைமையில், இன்று (26.11.2014) தலைமைச் செயலகத்தில், விதி 110ன் கீழான அறிவிப்பு மற்றும் கூட்டுறவுத்துறையின் மானிய கோரிக்கையின்போது அறிவித்த அறிவிப்புகளின் செயலாக்கம், அம்மா மருந்தகம் திறத்தல், பொதுவிநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத்திட்டம், பண்ணை பசுமை காய்கறி கடைகள், நடமாடும் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள், விவசாயிகளுக்கு பயிர்க் கடன், உர விநியோகம் மற்றும் குறைந்த வாடகையில் விவசாயக் கருவிகள் வழங்குதல், மற்றும் கூட்டுறவுத்துறையின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து, கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள் திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.பி.சிவன்அருள், திரு.இராம. ஜெயம்பாண்டியன், திருமதி கா.பிரமிளா, திரு.க.மா.வெள்ளியங்கிரி, திரு.கே.ஜெகன்நாதன், டாக்டர் என்.வில்வசேகரன், திரு. பா.பாலமுருகன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.ம.அந்தோனிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.